**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி**, B.A.,B.L.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**I.A.No.08/2025 In O.S.No.173/2022**

மா. குமார் (குடும்ப மேலாளர்) ... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர், கரூர்
2. கு. புஷ்பாதேவி, கோட்டாட்சியர் குளித்தலை
3. கலியமூர்த்தி, வட்டாட்சியர், குளித்தலை
4. காவல் ஆய்வாளர், குளித்தலை
5. செயல் அலுவலர், மருதூர் பேரூராட்சி
6. கோட்டாட்சியர் (சார் ஆட்சியர்) குளித்தலை
7. வட்டாட்சியர் குளித்தலை

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 10.09.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கில் வாதி. தாவா சொத்தில் மனுதாரர் இரண்டு குடிசை வீடுகள் கட்டி சுமார் 30 வயதுடைய வேப்ப மரங்கள் வைத்து வளர்த்து வந்தார். 20.12.2022 அன்று மனுதாரருக்கு தெரியாமல் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் வாதி அமைத்திருந்த வேலியை அத்து மீறி உள்ளே நுழைந்து JCB இயந்திரம் மூலம் குடிசை வீடுகளை இடித்து

தரை மட்டமாக்கியும், வேப்ப மரங்களையும் அருகில் இருந்த மரங்களையும் வெட்டி அப்புறப்படுத்தியும் வைக்கோல் போரை சேதப்படுத்தியும் சட்ட விரோதமாக அப்புறப்படுத்தி உள்ளனர். இவ்வழக்கு அவசர நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரப்பட்டது. தாவா சொத்தை பொறுத்து மனுதாரருக்கு எதிரிடை அனுபோக நீடனுபோக உரிமை மூலம் சித்தித்துள்ளது. தாவா நிலுவையில் உள்ள போது 08.02.2023 ல் மனுதாரர் மீது பொய்யான புகாரை கூறி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து மனுதாரரை எதிர்மனுதாரர்கள் அப்புறப்படுத்தி விட்டனர். எனவே தாவா சொத்து குறித்து விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

<u>7ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து மற்ற எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்</u>

2) மனுவில் சொல்லியுள்ள காரணங்களை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். தாவா சொத்தில் மனுதாரர் கூறுவது போல எவ்வித வீடோ, மரங்களோ இல்லை. தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலம் ஆகும். இதில் மனுதாரருக்கு நீடனுபோக உரிமை உள்ளது என கூறுவது ஏற்கத்தக்கதல்ல. இவ்வழக்கு விசாரணைக்கு வந்துள்ள நிலையில் வழக்கின் பரிகாரத்தை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. இம்மனுவை அனுமதித்தால் இவ்வழக்கு காலதாமதப்படுத்தப்படும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு</u>

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் வழக்கு நிலுவையில் உள்ள போது தங்களை தாவா சொத்தில் இருந்து அப்புறப்படுத்தி விட்டதாகவும் எனவே தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு விசாரணைக்கு வரும் நிலையில் மனு தாக்கல் செய்திருப்பதாகவும்

மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் பொய்யானது என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில் தற்போது வரை வழக்கு விசாரணை தொடங்கப்படவில்லை. மேலும் வாதி இவ்வழக்கில் தங்களது உரிமை குறித்து விளம்புகை பரிகாரமும், சுவாதீன மீட்பு பரிகாரமும் கோரப்பட வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது. தரப்பினர்கள் தங்கள் உரிமை மூலம் குறித்து உரிய பரிகாரத்தை கொடுக்காவிட்டால் மேற்படி பரிகாரமானது கால தோஷத்தால் பாதிக்கப்படும். எனவே மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் வழக்கின் விசாரணை தொடங்கப்படாத நிலையில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd./R.Tamilarasi

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

Sd./R.Tamilarasi

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 08/2025 in O.S.No. 173/2022**

**DRAFT / FAIR ORDER**

**D.D.16.09.2025**

**********************************